# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
முறையீட்டு மனு எண். 54/2019/பே.1
ஆணை நாள்: 13 -02-2020.

திரு.என்.சேகப்பன்,
3/30, கொமரலிங்கம் அஞ்சல்
மடத்துக்குளம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்–642204. —— முறையீட்டு மனுதாரர்.

செயல்அலுவலர்,
கொரமலிங்கம் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம். —— எதிர் மனுதாரர்.

## ஆணை.

திருப்பூர் மாவட்டம், எண்.3/30, கொமரலிங்கம் பகுதியினைச் சேர்ந்த திரு,என்,சேகப்பன் என்பவரது 19.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2018 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 137/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திருப்பூர் மாவட்டம், கொமரலிங்கம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி.அ.தாஜ்நிசா என்பவர் மீது பல்வேறு முறைகேடு புகார்கள் தெரிவித்து, விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

04.07.2018 நாளிட்ட அறிக்கை மூலம் புகாருக்குட்பட்ட கொரமலிங்கம் பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி அ.தாஜ்நிசா தனது விளக்க அறிக்கையில், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களை மறுத்தும், தான் திருப்பூர் மாவட்டம், கொமரலிங்கம் பேரூராட்சியில் 21.07.2011 முதல் 09.02.2016 வரையிலும் பின்னர் மீண்டும் 09.11.2016 முதல் தொடர்ந்து கொரமலிங்கம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும் தெரிரிவித்துள்ளார். மேலும் மின்சாரம் தொடர்பான புகாருக்கு, பேரூராட்சி கடைகளை ஏலம் எடுத்த நபர்கள் மூலமாகவே முறைகேடாக மின்சாரம் பயன்படுத்தியமைக்கான தொகையினை பேரூராட்சி செயல் அலுவலர் கணக்கில் ரொக்கமாக செலுத்தியமைக்கு 17.05.2018 நாளிட்ட மின்சாரத்துறை உதவி மின்பொறியாளர் கொமரலிங்கம் அவர்களின் கடிதத்தினை இணைத்தும், இது சம்பந்தமாக பேரூராட்சி கணக்கில் இருந்து எந்த தொகையும் செலுத்தப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பேரூராட்சிக்கு சுகாதாரப் பொருட்கள் வாங்கியது குறித்து தெரிவிக்கப்பட்ட புகார் தொடர்பாக புகார் மனுவில் தெரிவித்துள்ள நிறுவனங்களிடமிருந்து 2013–14 முதல் 2015–16 வரை பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு களை பேரூராட்சி மன்ற கூட்டங்கள் மூலம் உரிய அனுமதி பெற்று, பொதுமக்கள் நலன் கருதி பொருட்கள் வாங்கியதாகவும், இதில் எவ்வித புகார்களும் பெறப்படவில்லை எனவும், மேற்படி அன்னம் டிரேடர்ஸ் நிறுவனம் வணிக வரித்துறை சான்று பெறப்பட்ட நிறுவனம்

என்பதற்கான நகலும் இணைத்து சமர்ப்பித்துள்ளார், கொமலிங்கம் பேரூராட்சிக்கு சொந்தமான வணிக வளாக கடைகளில் ஒன்றினை முறையீட்டு மனுதாரரின் மருமகன் குத்தகைக்கு எடுத்து, அந்த இடத்தில் முறைகேடாக போதைப் பொருள் மற்றும் மது விற்பனை செய்ததினால் அதனை கண்டித்து மேற்படி கடையினை அப்புறப்படுத்தியதின் காரணமாகவும், முறையீட்டு மனுதாரர் "தேசிய மக்களாட்சி" என்ற பத்திரிக்கையாளரின் நிருபர் இல்லை என ஆதாரங்களுடன் தான் நிரூபித்த காரணத்தினால், தனக்கு பல இடையூறுகளை செய்து வருவதுடன் தன்னை குறித்து உயர் அலுவலர்களுக்கு புகார் அளித்து வருவதாகவும், முறையீட்டு மனுதாரர் தன் மீது புகார் மனுக்கள் எழுதாமல் இருக்க ரூ.2.50 லட்சம் கேட்டு தன்னை மிரட்டியதாகவும் தனது அறிக்கையில் கொரமலிங்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்

இம்முறையீட்டு மனு தொடர்பாக 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 6(4) (a) ன் கீழ் உரிய அமைப்பின் அறிக்கையும் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான கொமரலிங்கம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, உரிய புலன் விசாரணை அமைப்பின் அறிக்கை ஆகியன இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் தொடர்பாக முறையீட்டு மனுதாரால் போதிய ஆவணங்கள் அளிக்கப்படாத நிலையில் முறையீட்டு மனு ஆதாரமற்றது எனக் கருதி தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

**–// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–**

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர். 17.2.20

பெறுநர்
1.திரு.என்.சேகப்பன்,
3/30, கொமரலிங்கம் அஞ்சல்
மடத்துக்குளம் வட்டம்,
திருப்பூர் மாவட்டம்–642204
2.செயல் அலுவலர்
கொரமலிங்கம் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கோவை மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கோயம்புத்தூர்.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)